**இலங்கை திறந்த பல்கலைக்கழகம்**

**மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞானங்கள் பீடம்**

**சட்டக்கற்கைகள் திணைக்களம்**

**சட்டமாணி பட்டப்படிப்புத் திட்டம் - மட்டம் 3**

**இறுதிப்பரீட்சை - 2023/2024**

**LLU 3904 – சட்ட வழிமுறை**

**காலம்- 3 மணித்தியாலயம்**

**திகதி: 17.05.2025** **நேரம் : பி.ப. 01.30 – பி.ப. 04.30**

**ஐந்து (05) வினாக்களுக்கு மாத்திரம் விடையளிக்கவும், பகுதி 1 மற்றும் 2 இலிருந்து ஆகக் குறைந்தது இரண்டு (2) வினாக்களை தெரிவு செய்யவும்.**

**தெளிவற்ற கையெழுத்துக்கு புள்ளிகள் குறைக்கப்படும்.**

## பகுதி 1 – உரோமானியச் சட்டம்

01. 'பல நவீன சட்ட அமைப்புக்களின் அடித்தள்மான உரோமானியச் சட்டமானது, கடப்பாடுகளானவை அடிப்படையாக ஒப்பந்தங்கள் மற்றும் தீங்கியலிலிருந்தே எழுகின்றது என்பதை ஏற்றுக்கொள்கின்றது .'

    மேலே தரப்பட்ட கூற்றின் பின்னணியில் ஒப்பந்த கடப்பாடுகளின் தன்மை மற்றும் முக்கியத்துவத்தை ஆராய்க. வலிதான ஒப்பந்தத்திற்கு அவசியமான அத்தியவசிய கூறுகளை விளக்கி, ஒப்பந்த கடப்பாடுகளை, பகுதியளவான ஒப்பந்தங்கள் (quasi-contracts) போன்ற பிற வடிவங்களிளிருந்த வேறுபடுத்துக.

    (20 புள்ளிகள்)

02. டைட்டஸ், ஒரு உரோமானியக் குடிமகன் மற்றும் பீட்டர் பெமிலியாஸை சேர்ந்தவர், லூாசியஸ் மற்றும் கோர்னேலியா ஆகிய இரண்டு பிள்ளைகளை வாரிசாக விட்டு இறந்தார். அவரது மூத்த மகன் கயஸ் அவர் இறக்க முன்பே மார்கஸ் என்ற அவரது மகனை வாரிசாக விட்டு இறந்துவிட்டார். டைட்டஸ் இறக்கும் வரை அவரின் பெட்றியா பொட்டெஸ்டாஸின் கீழ் இருந்துள்ளார். டைட்டஸ், லூாசியஸ் மற்றும் கோர்னேலியாவை தனது சொத்துக்களுக்கு மரபுரிமையாளர்களாக பெயரிட்டு இறுதிவிருப்பாவணம் வரைந்துள்ளார். ஆனால் அவர் தனது பேரன் மார்கஸை இறுதிவிருப்பாவணத்தில் உள்ளடக்கவில்லை. டைட்டஸ், மார்க்கஸ் பொறுப்பற்றவர் என்றும் அவர் தான் பெறும் எந்தவொரு சொத்தையும் வீணடித்துவிடுவார் என்றும் நம்புகிறார். எவ்வாறாயினும், டைட்டஸ், மார்கஸை தன்னுடைய ஒரு வாரிசாக நிறுவவோ அல்லது இறுதிவிருப்பாவணத்தில் அவரை வெளிப்படையாக விலக்கவோ இல்லை.

இறுதிவிருப்பாவண மரபுரிமை மீதான உரோமானிய சட்டக்கொள்கைகளை விளக்கி டைட்டஸினுடைய இறுதிவிருப்பாவணத்தின் சட்ட வலிதுடைமை மற்றும் மார்கஸிற்கு கிடைக்கும் பரிகாரங்கள் பற்றி ஆராய்க.

(20 ள்ளிகள்)

03. எலியஸ் தன் அண்டை வீட்டாரான புருட்டஸின் வீட்டை அண்டி ஒரு வீடு மற்றும் விவசாய நிலத்தை உரிமைகொண்டுள்ளார். நிலத்தின் இயற்கையான சரிவு காரணமாக எலியஸ், புருட்டஸின் கிணற்றிலிருந்து ஒரு கால்வாய் வழியாக தன்னுடைய வயலுக்கு நீர் பாய்ச்ச அனுமதிக்கும் ஒரு சேவக உரிமையை கொண்டுள்ளார். இராணுவ சேவையிலிருந்து ஓய்வு பெற்ற பின் எலியஸ் உரோம் நகருக்கு சென்று தனது மருமகனான செவரெஸிற்கு தனது சொத்துக்களை கையளிக்கிறார்.

உரோமானிய சட்டத்தின் கீழ் பின்வரும் சூழ்நிலைகளின் சட்ட நிலைமையை ஆராய்க.

(அ) எலியஸ் சொத்தை கையளித்தவுடன் சேவக உரிமை முடிவடைந்து விட்டது என கூறி புருட்டஸ் நீர் வழியை தடைசெய்கிறார். மேலும், செவரெஸ், வெறும் கந்து வட்டிக்காரர் எனவே அதை அமுல்படுத்த முடியாது எனவும் வாதிடுறார்.

(06 புள்ளிகள்)

(ஆ) செவரெஸ், பழத்தோட்டத்தில் இருந்து அறுவடை செய்யப்பட்ட சில பழங்களை பயன்படுத்தி ஜாம் தயாரித்து அருகிலுள்ள நகரத்தில் பொருட்களை விற்பனை செய்கிறார். இவ் விற்பனையிலிருந்து கிடைக்கும் இலாபம் கூரையின் ஒரு பகுதியை மறுசீரமைக்க ஒதுக்கப்படுகிறது.

(06 புள்ளிகள்)

(இ)செவரெஸ், மேலதிக வருமானத்திற்காக வீட்டின இரண்டு அறைகளை புதிதாக திருமணமான தம்பதியினருக்கு வாடகைக்கு விடுகிறார். மேலும், சொத்தின் கவர்ச்சியை அதிகரிக்க பாதை ஓரங்களில் ஒலிவ் மரங்களை நடுகிறார்.

(08 புள்ளிகள்)

04. பின்வருவனவற்றில் எவையேனும் இரண்டிற்கு குறிப்பு எழுதுக.

(அ) டோஸ் (Dos)

(ஆ) மானுஸ் திருமணம் (Manus Marriage)

(இ) வேர்பிஸ் ஒப்பந்தம் (Contracts Verbis)

(ஈ) பகுதியளவான தீங்கியல் (Quasi-Delicts)

(10x2=20 புள்ளிகள்)

## பகுதி 2 – சட்டவழிமுறை

05. 'சட்ட மாணவருக்கு நூலகம் என்பது வெறும் அறிவுக்களஞ்சியம் மட்டுமல்ல. அது அவரது வர்த்தக கருவியையும் கொண்டுள்ளது. தொடர்புடைய சட்ட மூலப்பொருட்களை நேரடியாக அனுகுவதன் மூலம் பெற்ற அறிவு, நுண்ணறிவு மற்றும் அனுபவத்திற்கு மாற்றாக எதுவும் இல்லை. மற்ற மாணவர்களுக்கு ஒரு ஆய்வகம் எவ்வாறு இருக்கிறதோ, அதுபோலவே ஒரு சட்ட மாணவருக்கு நூலகமும் காணப்படுகிறது.'
*LLU3904 Legal Method Block 1, The Open University of Sri Lanka, p.7*

மேலே தரப்பட்ட கூற்றின் பின்னணியில் சட்ட மூலப்பொருட்களின் முக்கியத்துவத்தை ஆராய்க.

(20 புள்ளிகள்)

06. வெலோரிய அரசின் 2022ஆம் ஆண்டின் 9ஆம் இலக்க, தனிப்பட்ட தரவுப் பாதுகாப்புச் சட்டத்தின் பிரிவு 38(1) பின்வருமாறு குறிப்பிடுகிறது:

'கட்டுப்பாட்டாளர் அல்லது செய்முறைப்படுத்தநர் ஒருவர் 35 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் கீழ் வழங்கப்பட்ட பணிப்புரையொன்றுக்கு இணங்கியொழுகத் தவறுமிடத்து, அதிகார சபையானது, தரவுடன் தொடர்புபட்டோரின் மீதான தாக்கம், இயைபான இணங்கியொழுகாமைகளின் தன்மையும் அளவும் மற்றும் இச்சட்டத்தின் 39 ஆம் பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட கருமங்கள் என்பவற்றை கவனத்துட்கொண்ட பின்னர், ஒவ்வோர் இணங்கியொழுகாமைக்கும் பத்து மில்லியன் ரூபாவை விஞ்சாதிருக்க வேண்டிய ஒரு தண்டத்தை செலுத்தும்படி அத்தகைய கட்டுப்பாட்டாளரை அல்லது செய்முறைப்படுத்துநரை அறிவித்தல் மூலம் தேவைப்படுத்துதல் வேண்டும்.'

லியோன், வெலோரியா நாட்டின் தேசிய சுகாதார அதிகார சபையில் தரவு அதிகாரியாக பணியாற்றுகிறார். அவரது சக ஊழியரான எவன்ஸ், ஒரு கார் விபத்தில் சுய நினைவின்றி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள தனது மகளின் மருத்துவ பதிவேடுகளை அணுகுவதற்காக அவசர கோரிக்கயுடன் அவரை அணுகுகிறார். மருத்துவமனையில் உள்ளக அமைப்புக்கள் செயலிழந்திருந்ததன் காரணமாக அவசர ஒப்புதல் பெற முடியாததால் லியோன், எவன்ஸின் மகள் தொடர்பான தனிப்பட்ட தரவை மீட்டு, அவசர அறுவைச் சிகிச்சைக்காக ஒரு தனியார் மருத்துவமனைக்கு மாற்றுவதற்காக எவன்ஸிடம் கொடுத்தார்.

முறையான அனுமதியை பெறாமல் தனிப்பட்ட தரவை வெளியிட்டதற்காக லியோன் மீது தனிப்பட்ட தரவுப் பாதுகாப்புச் சட்டத்தின் பிரிவு 38இன் கீழ் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

நியதிச்சட்ட பொருள்கோடல் விதிகளை பயன்படுத்தி லியோனின் சட்ட நிலைப்பாட்டை ஆராய்க. உமது நிலைப்பாட்டை பொருத்தமான தீர்ப்புச் சட்டங்களுடன் ஆதாரப்படுத்துக.

(20 புள்ளிகள்)

07. பாரம்பரிய வெள்ளி ஆபரணக் கைத்தொழிலிற்கு பெயர் பெற்ற ரன்முதுடுவ என்ற கிராமத்தில் ஆபரணங்கள் செய்யம் பணியில் பிள்ளைகளும் சிறு வயதிலிருந்தே பெற்றோருடன் இணைந்து கொள்வது நீண்ட கால வழக்காறாக இருந்து வருகிறது. இந்நடைமுறை வெள்ளி ஆபரண தயாரிப்பின் தலைமுறை திறன்களையும் கலாச்சார பாரம்பரியத்தையும் பாதுகாக்கும் என நம்பப்படுகிறது. கிராம பெரியவர்கள், இந்த கைத்தொழிலை கற்றுக்கொள்வது முறையான கல்வியை போல மதிப்புமிக்கது என வலியுறுத்துகின்றனர்.

இக்கிராமத்தைச் சேர்ந்த 10 மற்றும் 12 வயதுடைய நிமல் மற்றும் கமல் ஆகிய இரு குழந்தைகள் பாடசாலைக்கு சமுகமளிக்கவில்லை. திறமையான கைவினைஞர்களான இவர்களின் பெற்றோர், கிராம வழக்காற்றின்படி கைவினைக்கலையின் தொடர்ச்சித்தன்மையை உறுதி செய்வதற்காக பிள்ளைகள் வளரும் பருவத்தில் ஆபரணத் தயாரிப்பில் தீவிரமாக பங்கேற்கவேண்டும் என உறுதியாக நம்புகின்றனர்.

எவ்வாறாயினும், தேசிய கல்விச் சட்டம் மற்றும் அரசியலமைப்பு ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள பிள்ளைகளின் கல்விக்கான உரிமை ஆகியவற்றை மேற்கோள்காட்டி இதற்கு பாடசாலை அதிகாரிகள் விசனம் தெரிவித்துள்ளனர். பாரம்பரிய நடைமுறைகள் முக்கியமானவை என்றாலும், அவை பிள்ளைகளின முறையான கல்வியின் சட்டக்கடமையை மீற முடியாது என அவர்கள் வாதிடுகின்றனர். பிள்ளைகள் பாடசாலைக்கு சேர்க்கப்படாமலிருத்தல் மற்றும் தொடர்ச்சியான சமுகமளிக்கவில்லையாயின் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என கல்வி அமைச்சு எச்சரிக்கை விடுத்துள்ளது.

ஆபரணத் தயாரிப்பில் பிள்ளைகள் ஈடுபடுத்தப்படும் வழக்கம் நீண்டகாலமாக இருந்து வருவதோடு சமுகரீதியாகவும் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. எனவே. அது வழக்காற்றுச்சட்டம் மற்றும் கலாச்சார உரிமைகளின் கீழ் பாதுகாப்பிற்கு உரித்துடையது என கிராம மக்கள் வலியுறுத்துகின்றனர்.

கிராமவாசிகள் தம் நடைமுறையை நியாயப்படுத்தும் வழக்காற்றின் சட்ட வலிதுடைமையை வெற்றிகரமாக நிறுவ முடியுமா என அவர்களுக்கு ஆலோசனை வழங்குக. உங்கள் விடையில் வழக்காற்றை அங்கீகரிப்பதற்கான சட்டத் தேவைப்பாடுகள் மற்றும் தொடர்புடைய தீர்ப்புச்சட்டங்கள் என்பவற்றை உள்ளடக்குக.

(20 புள்ளிகள்)

**08.** பின்வருவனவற்றில் எவையேனும் இரண்டு பற்றி குறிப்பு எழுதுக.

(அ) முற்தீர்ப்பு (*Stare Desisis*)

(ஆ) ஒரு தீர்ப்பை ஒதுக்குதல் (*Overruling a judgement)*

(இ) தீர்த்தது தீர்த்த படியே (*Ratio decedendi*)

(ஈ) மிகைக்கூற்று (*Obiter dicta)*

(20 புள்ளிகள்)

-முழுப்பதிப்புரிமையுடையது-

69